புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2023** **03 மார்ச் 2023**

# <u>பத்திரிகை செய்தி</u>

மக்கள் மருந்தக வார விழாவை ஒட்டி, புதுச்சேரி-முத்தியால்பேட்டையில் உள்ள மக்கள் மருந்தகத்தை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் இன்று(03.03.2023) பார்வையிட்டார்.

பொதுமக்கள் முன்னிலையில், மருந்தகத்தில் உள்ள மருந்துகளின் இருப்பை மற்றும் வகைமையைப் பார்வையிட்டார். விற்பனை திறன் குறித்து கடை பொறுப்பாளரிடம் கேட்டறிந்தார்.

செய்தியாளர்களிடம் பேசிய துணைநிலை ஆளுநர்,

- மக்கள் மருந்தகங்கள் எந்த அளவிற்கு மக்களுக்கு பயன் தருகிறது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த வாரம் மக்கள் மருந்தக வாரமாக கொண்டாடப்படுகிறது. நேற்று மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி தொடங்கி வைக்கப்பட்டது. இன்று, மக்கள் மருந்தகத்தை மக்கள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வந்தோம்.
- மக்கள் மருந்தகங்களில் 90 % மருந்துகள் விலை குறைவாக கிடைக்கிறது. வெளியில் விலை அதிகமான குளுக்கோமீட்டர் இங்கு 500 ரூபாய்க்கும் அதோடு பரிசோதனை பட்டைகளும் தரப்படுகிறது. வெளியில் இந்த குறைந்த விலையில் வாங்க முடியாது. இங்கு சத்து மாவு மிகக் குறைந்த விலையில் கிடைக்கிறது.
- மக்கள் மருந்தகம், பாரதப் பிரதமரின் கனவு திட்டம். நல்லவற்றை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இது மிகவும் பயன் தரக்கூடிய ஒன்று. பத்திரிக்கையாளர்கள் இதை பிரபலப்படுத்த வேண்டும்.
- மக்கள் மருந்தகங்கள் லாபத்திற்காக நடத்தப்படும் கடைகள் அல்ல. மக்களின் நலனுக்காக, உடல் நலத்திற்காக நடத்தப்படுவது. அதனால் இதை பிரபலப்படுத்த வேண்டும்.
- அரசு மருத்துவமனைகளில் முடிந்த அளவுக்கு மாத்திரைகள் தரப்படுகிறது. உயர் ரக ரத்த அழுத்த மாத்திரைகள், சில எதிர்ப்பு சக்தி மாத்திரைகளை வெளியில் வாங்கிக் கொள்ள எழுதிக் கொடுக்கப்படுகிறது. அடிப்படையில் மருந்துகள் இவைதான். பெயர்கள் வேறு வேறாக இருக்கலாம்.

என்று தெரிவித்தார்.